<u>OS. 365/2018</u>

வா.சா.1 வேலு,   த/பெ.முனுசாமி                         நாள்   15.10.2024

<u>2ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் கூறியது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 2ம் பிரதிவாதியின் பெயர் தாமஸ்ஆரோக்கியதாஸ். நான்கு அயிட்ட சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதி பெயரில் சி மற்றும் ஹெச் அயிட்ட சொத்துக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து 3 ஏக்கர் 90 சென்ட்டை பாலமுதலியார், கெங்காதர முதலியார், சின்னசாமி உடையார் ஆகியோரிடமிருந்து வாங்கினேன் என்றால் இல்லை, கட்டைய முதலியார், கலியமுதலியார், வேலு முதலியார், திருவேங்கடம், கோவிந்தராஜ், எத்திராஜ் மற்றும் வரதன் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றேன். வழக்கு சொத்திற்காக மூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாலமுதலியார், கெங்காதர முதலியார், சின்னசாமி உடையார் ஆகிய மூவரையும் எனக்கு நேரில் தெரியாது, நான் கிரையம் வாங்குவதற்கு முன்னரே அவர்கள் இறந்துவிட்டார்கள். தாவா சொத்து என்னுடைய பெயரில் வாங்கப்பட்டதா என்றால்இல்லை, மூத்த அண்ணன் கண்ணன் பெயரில் 1980ல் வாங்கப்பட்டு, எங்களுக்குள் 1986ல் பாகம் ஏற்பட்டு வழக்கு சொத்து என்னுடைய பாகத்திற்கு வந்தது. பாகம் ஏற்பட்ட பின்னர் என் பெயரில் நான் பட்டா மாற்றிக்கொண்டேன். மூலப்பத்திரத்தில் உள்ள சொத்திற்கான நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியவில்லை. 19-01-1980ல் அப்பாவு நாயுடு 47-1/2 சென்ட் கிரையம் பெற்றது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதே தேதியில் வேறு ஒரு பத்திரம் பதிவு செய்யப்பட்டது பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா

சொத்தை 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றது பற்றி எனக்கு தெரியாது. அவர் கிரையம் பெற்றதாக 2016, 2017ல் தெரிய வந்தது. வில்லங்கம் பார்த்தேன் அப்போது தெரியவந்தது. வில்லங்கத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.1ல் காசிவேல் நிலத்திற்கு மேற்கே என்று குறிப்பிட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.1ன்படி கண்ணன் என்பவர் வாதிகளுக்கு சொத்தை எழுதிக்கொடுக்க உரிமை இல்லை என்றால், உரிமை உள்ளது. கண்ணனை தரப்பினராக சேர்த்திருக்கலாம் என்றால் அவர் கிரையம் கொடுத்துவிட்டதாலும், தற்போது நாங்கள் தான் உரிமையாளர் என்பதாலும் அவரை சேர்க்கவில்லை. வா.சா.1 கண்ணனால் மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.2ம் மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதால் செல்லாது என்றால் சரியல்ல. யூடிஆர் பட்டாவில் தவறு நடந்துள்ளது. தாவா சொத்தின் அடங்கலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதிகளுக்கு வழக்கு தொடர்ந்திருப்பது தவறானது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்திற்கான நான்குஎல்லைகள், விஸ்தீரணம் தெரியாது. 2ம் பிரதிவாதி என்ன பயிர் செய்துள்ளார் என்றால், நான் தான் பயிர் செய்துள்ளேன். நான் பயிர் செய்துள்ள நிலத்தின் நான்கெல்லைகளில் உள்ள உரிமையாளர்களின் பெயர்கள் ஞாபகம் இல்லை. 10, 20 வருடங்களுக்கு முன்பு உள்ள உரிமையாளர்களின் பெயர்களும் தெரியவில்லை. இந்த தாவாவில் ரிஷிவந்தியம் சார்பதிவாளரை ஏன் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால், தேவையில்லை என்று சேர்க்கவில்லை. தாவா சொத்திற்கான சிட்டா, அடங்கல் 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்பதால் அவர் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை, என் பெயரில் தான் உள்ளது நான் தான் அனுபவித்து வருகிறேன். தாவா சொத்தை வாங்கிய தேதியில் இருந்து தற்போது வரை அதன் மீது பயிர் கடன் பெற்றுள்ளேனா என்றால்

சித்தால் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றுள்ளேன். 2ம் பிரதிவாதி இடையூறு செய்த தேதி, வருடம் ஞாபகம் உள்ளதா என்றால் 2018 ல் இருந்து தகாத வார்த்தைகளால் பேசி பிரச்சனை செய்து வருகிறார். அதனால் கிரிமினல் வழக்கு தொடராமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் எனது தம்பிகளுக்கும் பங்கு உள்ளதால் அவர்களுக்காகவும் நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன். வழக்கு சொத்தில் எனக்கோ, என் தம்பிகளுக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அரசு தீர்வை செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்வதாக ஊரில் உள்ளவர்களிடம் பேசிக்கொண்டதை கேள்விப்பட்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. இடத்தை அளந்து பார்க்கும் போது எங்களுக்கு குறைவாக இருந்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால், எனக்கு தெரியவில்லை. நாங்கள் அனுபவித்து வரும் தாவா சொத்து பாலமுதலியார், கெங்காதர முதலியார், சின்னசாமி உடையார் ஆகிய மூவருக்கும் சொந்தம் என்றால், அவர்களுக்கு சொந்தமாக இருந்து பாலமுதலியார், கெங்காதர முதலியார் மகனிடமிருந்து நாங்கள் வாங்கினோம். தாவா சொத்தை அனுபவம் செய்யாமல் பொய்யான தகவலுடன் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழிநடை பாத்தியத்திற்காக பொய்யாக பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.